ஆளுநர் ஆர்.என். ரவியைக் கண்டித்து

# திருப்பத்தூரில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழகத்தினர் முழக்கமிட்டனர்!

திருப்பத்தூர், ஜன.8-

ஆளுநர் ஆர்.என். ரவியைக் கண்டித்து திருப்பத் தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார் பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத் தூர் தாலுக்கா அலுவலகம் எதிரில் 2025 (செவ்வாய்க் கிழமை) காலை 10 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் ஆர். எஸ்.ஆனந்தன் தலைமையில் தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும் ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருப்பத்தூர் நகரச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார்.

இக்கூட்டத்தில் மு.மாவட்ட பொறுப்பாளர் ம.முத்தமிழ்ச்செல்வி, மாவட்ட துணை செயலாளர்கள் ஆ.சம்பத்குமார், சாந்திசீனிவாசன், மாவட்டப் பொருளாளர் கே.பி. ஆர்.ஜோதிராஜன், திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என். கே.ஆர்.சூரியகுமார், மாநில தொண்டரணி து.செயலாளர் பி.எம். முனிவேல்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கு.ராஜமாணிக்கம், சி.சத்தியமூர்த்தி, மு.அசோகன், நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள் வி.எஸ்.சாரதிகுமார், ம. அன்பழகன், ப.ச.சுரேஷ் குமார், க.உமாகன்ரங்கம், கே.சதிஷ்குமார், கவிதா தண்டபாணி, எஸ். தாமோதரன், கே.ஆர். திருப்பதி, டி.சாமுடி, கே.முருகேசன், கே.ஏ. குணசேகரன், டி.அசோக் குமார், அ.மோகன்ராஜ், ராமமூர்த்தி, முரளி, ம.ஸ்ரீதர், அ.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சு.அரசு, கே.சாமண்ணன், சத்தியநாராயணன், ம.விமலன், கோவிந்தம்மாள்பெருமாள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வி.வடிவேல், தே.பிரபாகரன், மு.க.அருள்நிதி, ஏ.சி.தேவகுமார், மு.பழனி, எஸ். ராஜா, ஆர்.தசரதன், எம். சிங்காரவேலன், எம்.சார்லஸ்நவீன்குமார், பூ.சதாசிவம், எஸ்.சரவணன், சையத் அபீப்தங்கல், கா. தேவராஜ், எஸ். திருநாவுக்கரசு, மு.ரகுபதி, சந்தீப்ராஜ், மேகநாதன், சி.குணசேகரன், ஆர்.சுதா, திருப்பத்தூர் நகர மன்ற தலைவர் சங்கீதா வெங்கடேசன், ஜோலார் பேட்டை நகர மன்ற தலைவர் காவியாவிக்டர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகி கள், மாவட்ட து. அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் பெரும் திரளாக கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினார்கள்.

---

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்து

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் கண்டன முழக்கங்களை முழங்கினார்!

குமரி,ஜன.8-

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்து

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் கண்டன கோஷங்களை முழங்கினார்!

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜெண்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசை மாற்றும் வித்தைகளைச் செய்யும் அ.தி.மு.க. - பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் (7.01.2025 - செவ்வாய்க்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு நாகர்கோவில், தலைமை தபால் நிலையம் முன்பு வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார். கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் ஆளுநரையும், அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க பா.ஜ.க. கள்ளக் கூட்டணியை கண்டித்தும் கண்டன கோஷங்களை முழங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லைசெல்வம், மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ. ஹெலன் டேவிட்சன், தணிக்கைக் குழு உறுப்பினர் என்.சுரேஷ்ராஜன், மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரத்தினம், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


# நாகை மாவட்ட திமுக சார்பில்

கழக இளைஞர் அணி செயலாளர் , தமிழ்நாடு அரசு துணை முதலமைச்சர்

மாண்புமிகு **இளந்தலைவர்** அவர்களின்

## பிறந்தநாள் விழா

## பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனை பிரச்சாரக்கூட்டம்



| வ.எண் | நாள் | இடம் | பேச்சாளர் பெயர் | இளம் பேச்சாளர் |
|---|---|---|---|---|
| 1 | 09.01.2025 | வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம் | போடி.காமராஜ் | அருண்குமார் |
| 2 | 09.01.2025 | தலைஞாயிறு ஒன்றியம் | முனைவர். பொன்னேரி சிவா | விஜயலெட்சுமி |
| 3 | 09.01.2025 | நாகை வடக்கு ஒன்றியம் | சைதை சாதிக் | கல்பனா |
| 4 | 09.01.2025 | திட்டச்சேரி பேரூர் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி | தினேஷ் பாபு |
| 5 | 09.01.2025 | கீழ்வேளூர் தெற்கு ஒன்றியம் | கந்திலி கரிகாலன் | பிரீத்தி |
| 6 | 09.01.2025 | கீழையூர் மேற்கு ஒன்றியம் | பவானி கண்ணன் | அகிலா |
| 7 | 09.01.2025 | வேளாங்கண்ணி பேரூர் | திருவெற்றியூர். கருணாநிதி | கனிமொழி |
| 8 | 10.01.2025 | நாகை நகரம் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி | தினேஷ் பாபு |
| 9 | 10.01.2025 | வேதாரண்யம் நகரம் | மன்னை சோம.இளங்கோவன் | பிரீத்தி |
| 10 | 10.01.2025 | தலைஞாயிறு பேரூர் | சேலம். சுஜாதா | தீன்ஷா |
| 11 | 10.01.2025 | வேதாரண்யம் மேற்கு ஒன்றியம் | பசும்பொன் ரவிச்சந்திரன் | விக்னேஷ்வரி |
| 12 | 10.01.2025 | திருமருகல் தெற்கு ஒன்றியம் | தூத்துக்குடி.சரத்பாலா | ஷிவானா மரியம் பீவி |
| 13 | 10.01.2025 | நாகூர் நகரம் | சைதை சாதிக் | அகிலா |
| 14 | 10.01.2025 | கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் | குடியாத்தம் புவியரசி | அருண்குமார் |
| 15 | 10.01.2025 | கீழையூர் கிழக்கு ஒன்றியம் | பவானி கண்ணன் | சுக நிலவன் |
| 16 | 10.01.2025 | நாகை தெற்கு ஒன்றியம் | கரூர். முரளி | சின்மகி |
| 17 | 10.01.2025 | கீழ்வேளூர் பேரூர் | நாகை. நாகராஜன் | பிரபாகரன் |

© GS Designs

குறிப்பு : திருமருகல் வடக்கு ஒன்றியத்தில் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொள்ள இருப்பதால் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**என்.கௌதமன்**
மாவட்ட கழக செயலாளர், நாகை மாவட்ட திமுக


# ஆளுநரைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!



தமிழக சட்டசபையின் மாண்பை சீர்குலைக்கும் வகையிலும் மற்றும் தமிழ்நாடு முன்னேற்றத்தில் தடையாக இருக்கும் ஆளுநர் ஆர்.என். ரவியைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா இளந்திரையன், இரா.கற்பகம், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், மாநில மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம்.தேன்மொழி, தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.செல்வராஜ், கோ.பாஸ்கரன், நகரச் செயலாளர் இரா.சக்கரை உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் , அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் பேரறிஞர் அண்ணா சிலை அருகே தொகுதி மேர்பார்வையாளர் முனைவர் சபாபதிமோகன் தலைமையில் நடைபெற்றது. உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநர் ரவியைக் கண்டித்து நாகையில் அவுரி திடலில் நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நாகை மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



கரூர் தலைமை தபால் நிலையம் அருகில், கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில், அத்துமீறும் ஆளுநரைக் கண்டித்தும் அதற்கு துணை போகும் அ.தி.மு.க., பா.ஜ.க., கள்ளக் கூட்டணியை கண்டித்தும், மாபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில் நடைபெற்றது. மாவட்ட கழக அவை தலைவர் டி. ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாநில நெசவாளர் அணித்தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என் மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி மணி, மாநில சிறுபான்மை பிரிவு இணைச்செயலாளர் முனவர் ஜான், மாநில கொள்கை விளக்க துணைச்செயலாளர் கரூர் முரளி, மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். பகுதி கழக பொறுப்பாளர் விஜிஎஸ்.குமார் நன்றி கூறினார்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும், அவரை காப்பாற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியையும் கண்டித்து நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நாமக்கல் மோகனூர் சாலை பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் நாமக்கல் மாநகராட்சி மேயர் கலாநிதி, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.